


21. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜோஹன்னஸ்பர்க் ஜி-20 உச்சிமாநாட்டின் அனைத்து அமர்வுகளிலும் பங்கேற்கிறார்.
- உலக நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் மேற்கொள்கிறார்.
- உலகளாவிய திரைப்பட தயாரிப்பு தளமாக இந்தியா மேம்பட்டுள்ளதால் சர்வதேச ஒத்துழைப்பிற்கு மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.
- மீன்வளத்துறையில் உற்பத்தியையும், ஏற்றுமதியையும் அதிகரிக்க ஒருங்கிணைந்த செயல்பாட்டின் அவசியத்தை மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு.ராஜீவ்ரஞ்சன் வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் சார்பிலான புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் இன்று சென்னையில் திறந்துவைத்தார்.
- ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு லக்ஷயாசென் முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி ஜோஹன்னஸ் பர்க்கில் நடைபெறும் ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இன்றுகாலை தென்னாப்பிரிக்கா புறப்பட்டார்.

3 நாள் பயணமாக தென்னாப்பிரிக்கா சென்றுள்ள பிரதமர் இன்றுமாலை ஜோஹன்னஸ் பர்க் சென்றடைகிறார்.

இந்த மாநாட்டின் அனைத்து அமர்வுகளிலும் பங்கேற்கும் பிரதமர், நீடித்த வளர்ச்சி, தென்னாடுகளின் பிரச்சனைகள், இந்தியாவின் முக்கிய முன்னுரிமைகள், காலநிலை மாற்றம், எரிசக்தி, உலகளாவிய ஆளுமையில் சீர்த்திருத்தங்கள் உள்ளிட்டவை குறித்து எடுத்துரைக்கிறார்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக தென்னாப்பிரிக்க அதிபர் திரு. சிரில் ராமஃபோர்சா உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இந்தியா – பிரேசில் – தென்னாப்பிரிக்க தலைவர்கள் கூட்டத்திலும் பிரதமர் கலந்துகொள்கிறார்.

பிரதமரின் நான்காவது தென்னாப்பிரிக்க பயணம் இதுவாகும்.

ஒற்றுமை, சமத்துவம், நிலைத்தன்மை என்ற தலைப்பில் இந்த உச்சிமாநாடு நடைபெறுகிறது.

முன்னதாக பிரதமர் வெளியிட்ட அறிக்கையில் நம்நாட்டின் தொலைநோக்கு பார்வையான ஒரே பூமி ! ஒரே குடும்பம் ! ஒரே

எதிர்காலத்தை வலியுறுத்தும் அமசங்கள் குறித்து இந்த உச்சிமாநாட்டில் தாம் எடுத்துரைக்க உள்ளதாக கூறினார்.

உலகாளவிய பிரச்சனைகள் குறித்து விவாதிக்க இந்த உச்சிமாநாடு ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜி-20 இந்திய தலைமைத்துவத்தின் போது, ஆப்பிரிக்கா யூனியன் உறுப்பு நாடாக மேம்பட்டதையும் பிரதமர் நினைவு கூர்ந்தார்.

தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்திய சமூகத்தினரை சந்தித்துபேச தாம் ஆவலுடன் இருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டில் எல்லை பாதுகாப்புபடை நவீனமயமாக்குவதற்கான பணிகள் வரும் ஆண்டு முழுவீச்சில் மேற்கொள்ளப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் புஜ்ஜில் BSF உருவான வைர விழா நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், எல்லை பாதுகாப்பு படையினரின் நலன்களுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

இதற்காக 5 ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருப்பதாகவும், அதிநவீன அதிரடிப்படையாக எல்லை பாதுகாப்பு படை உருவெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இப்படையினர் மின்னணு சார்ந்த பாதுகாப்பில் நவீனத்துவம் பெறும் வகையில் மத்திய அரசின் செயலாக்கம் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

தீவிரவாத தடுப்பு நடவடிக்கைகளில் எல்லை பாதுகாப்பு படையினரின் செயலாக்கத்தை பாராட்டிய அமைச்சர், சட்டீஸ்கடில் 127 மாவோயிஸ்டுகளை சரணடைய செய்ததோடு, 73 பேரை இப்படையினர் கைது செய்ததாக எடுத்துரைத்தார்.

நாட்டிற்குள் ஊடுருவும் ஒவ்வொரு தீவிரவாதியையும் கண்டறிந்து அவர்களை அகற்றுவதே அரசின் நோக்கம் என்றார்.

தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட அவர், இதன்மூலம் தேசத்தின் ஜனநாயகம் பாதுகாப்பாகவும், தூய்மையாகவும் இருக்கும் என்று சுட்டிக்காட்டினார்.

எல்லை பாதுகாப்பு படையின் வைரவிழா நினைவு அஞ்சல் தலையை வெளியிட்ட அமைச்சர், அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக்கெண்டார்.

சிறப்பாக பணியாற்றிய BSF வீர்களுக்கு வீரதீர விருதுகளை வழங்கியதோடு, உயிர்த்தியாகம் செய்த வீரர்களுக்கு அமைச்சர் அஞ்சலி செலுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

எல்.முருகன்

உலகளாவிய திரைப்பட தயாரிப்பு தளமாக இந்தியா மேம்பட்டுள்ளதால் இப்பிரிவில் சர்வதேச ஒத்துழைப்பிற்கு மத்திய

தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் அழைப்பு விடுத்துள்ளார்.

கோவாவில் 56-வது சர்வதேச திரைப்பட விழாவில் இணை தயாரிப்பிற்கான தூதர்கள் வட்டமேஜை மாநாட்டில் இன்று தலைமை உரையாற்றியஅவர், உள்நாட்டு ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு பிரிவின் வருவாய் அடுத்த 10 ஆண்டுகளில் 31 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இணை தயாரிப்பிற்காக இந்தியாவின் கதவுகள் சர்வதேச நாடுகளுக்கு திறக்கப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திறன்களை கண்டறிதல், தொழில்நுட்ப புதுமைகளை மேம்படுத்துதல், திரைப்பட திருட்டிற்கு எதிரான நிலைப்பாடுகளை வலுப்படுத்துதல், எல்லை தாண்டிய திரைப்பட தயாரிப்புகளை எளிதாக்குதல், கலாச்சார பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துதல் போன்றவற்றிற்கு இந்த வட்டமேஜை மாநாடு வழிகோலுவதாகவும் டாக்டர் எல்.முருகன் கூறினார்.

தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. சஞ்சய் ஜஜு பேசுகையில், சர்வதேச ஒத்துழைப்புடன் ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு பிரிவை மறு வடிவமைப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

நவீன தொழில்நுட்பங்குடன் உலக தரத்திலான படப்பிடிப்பு தளங்கள் இந்தியாவில் உள்ளதால் இந்த வாய்ப்பை சர்வதேச நாடுகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றார்.

டோஹோ, மொராக்கோ, அயர்லாந்து, க்யூபா, ஆஸ்திரேலியா, நேபாளம், இஸ்ரேல், கயானா, Coted d Ivoire நாடுகளின் தூதர்கள் இதில் பங்கேற்றனர்.

முன்னதாக திரை சார்ந்த உயர்நிலை வகுப்புகளையும் அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

மீன்வளம்

சர்வதேச மீன் உற்பத்தியில்இ இந்தியா இரண்டாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளதாக மத்திய மீன்வளத் துறை அமைச்சர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற மீன்வள தின கொண்டாட்டங்களில் காணொலி மூலம் பங்கேற்ற அவர்இ இத்துறையில்இ உற்பத்தி மற்றும் ஏற்றுமதியை அதிகரிக்க ஒருங்கிணைந்த அணுகுமுறையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இத்தினத்தையொட்டி முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், தமிழகத்தில் மீன்பிடித் தடைக்கால நிவாரண உயர்வு, மானிய டீசல் அளவு உயர்வு கடனுதவிகள் மீன்பிடி துறைமுகங்கள், இறங்கு தளங்கள், தூண்டில் வளைவுகள் போன்ற மீனவர் நலன் சார்ந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் மீன்பிடி தொழிலை தடையின்றி மேற்கொள்ள மீனவ கிராமங்களில் தூண்டில் வளைவு உள்ளிட்ட தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி

தரவேண்டுமென்று மீனவர்கள் கோரிக்கை விடுப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

கன்னியாகுமரி மாவட்டம் பெரியகாடு கடற்கரை கிராமத்தில் மீன்வள தினத்தை ஒட்டி, கடலுக்கு மலர்த்தூவி சிறப்பு பிரார்த்தனையில் மீனவர்கள் ஈடுபட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

கட்டமைப்புத்துறை, எரிசக்தி நிபுணர்களுடன் மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் இன்று பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைகளை மேற்கொண்டார்.

மின்சாரம், துறைமுகம், கப்பல், நீர்நிலை, சாலை போக்குவரத்து அமைச்சகங்களின் செயலர்கள் இதில் பங்கேற்றனர்.

ரயில்வே வாரிய தலைவரும், மத்திய அரசின் முதன்மை பொருளாதார ஆலோசகரும் பங்கேற்ற இந்த கூட்டத்தில் கட்டமைப்பு துறைசார்ந்த பட்ஜெட் ஒதுக்கீடுகள் சிறப்பு அம்சங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

நிதியமைச்சர் வர்த்தக சங்க பிரதிநிதிகள், தொழிலாளர் நல அமைப்பினர், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையினருடன் நேற்று ஆலோசனைகளை மேற்கொண்டார்.

இந்த ஆலோசனைகளில் பெறப்படும் கருத்துக்களின் அடிப்படையில் பட்ஜெட்டை வடிவமைத்து முக்கிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளவதற்கான அம்சங்கள் நிதிநிலை அறிக்கையில் இடம்பெற வகை செய்யப்படும்.

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி ஸ்டாலின்

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியம் சார்பில் சென்னை வேம்புலி அம்மன் கோவில் மற்றும் சீனிவாசபுரம் ஆகிய 2 திட்டப்பகுதிகளில் 89 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 584 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தின் அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நாளையும் நாளைமறுநாளும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த படிவங்களை பூர்த்தி செய்ய உதவிடும் வகையில் உதவி மையங்கள் செயல்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் நடைபெற்று வரும் இம்முகாம்களில் வாக்காளர்கள் பங்கேற்று பயன்பெறுமாறு ஆட்சித்தலைவர் திரு. சரவணன் அறிவுறுத்தியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் சிறப்பாக பணிபுரிந்த 10 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு

ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

நாகூர் தர்கா

நாகூர் தர்காவின் ஆண்டு கந்தூரி விழா இன்றுமாலை கொடியேற்றத்துடன் தொடங்குவதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் சார்பில் தனியார்துத்துறை வேலைவாய்ப்பு முகாம் இன்று நடைபெற்றது.

திருப்பத்தூரில் மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான ஓவிய போட்டியை ஆட்சித் தலைவர் திருமதி. சிவசௌந்தரவள்ளி இன்று தொடங்கிவைத்தார்.

திருச்சி, புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தென்கிழக்கு வங்கக்கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

இது வரும் 24-ம் தேதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக்கூடும் என்றும், இதன் காரணமாக தமிழகத்தில் பரவலாக மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சிட்னியில் நடைபெறும் ஆஸ்திரேலிய ஓப்பன் பேட்மிட்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயாசென் முன்னேறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - தென்னாப்பிரிக்க அணிகளுக்கு இடையேயான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி குஹாட்டியில் நாளை நடைபெறுகிறது.

2 போட்டிகள் கொண்ட இத்தொடரில் தென்னாப்பிரிக்கா 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

குத்துச்சண்டை

நொய்டாவில் நடைபெறும் உலக கோப்பை குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் அருந்ததி சௌத்ரி, பிரீத்தி பவார், மீனாட்சி ஹுடா, நுபுர் ஷியோரன் ஆகியோர் தங்கப்பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖